හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
Department of Treasury Operations

කැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල්, ප්‍රමෙයිපාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
த.பெ.1559, பொது திறைசேரி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு , கொழும்பு 01 ,இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Planning and Economic Development, Colombo 01, Sri Lanka

කාර්යාලය அலுவலகம் Office: +94 11 2484600, +94 11 2484700
ෆැක්ස් பெக்ஸ் Fax: +94 11 2484970, +94 11 2320042
වෙබ් අඩවිය இணையதளம் Website: www.treasury.gov.lk

මගේ අංකය எனது இல My No. TO/CFM/01/05/03

ඔබේ අංකය உமது இல Your

දිනය திகதி Date 2026.11. 12

திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் *01/2026*

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்

2026 ஆம் நிதியாண்டின் இறுதியில் காசுப் புத்தகங்களை மூடுதல் மற்றும் பணி முற்பணக் கணக்குகளை மூடுதல்.

என்னால் வெளியிடப்பட்ட 2020.10.14 ஆம் திகதிய திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இல.06 இல்குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி, 2026 ஆம் ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகங்களை மூடுதல் மற்றும் பணி முற்பணக் கணக்குகளை மூடுதல் ஆகியவற்றின்போது இங்கு கீழே காட்டப்பட்டுஉள்ள தினங்களுடன் இணங்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

1. **2026 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காசுப் புத்தகத்தை மூடுதல்.**

2026 ஆம் ஆண்டின் காசுப் புத்தகத்தை 2026 டிசம்பர் 31 ஆம் திகதியின் இறுதியில் திறைசேரி வழிகாட்டிஇல.06 இல் 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக மூடுதல் வேண்டும்.

2. **2026 ஆம் ஆண்டிற்கான பணி முற்பணக் கணக்கை (7002) மூடுவதற்காக வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல். (வழிகாட்டலில் இல.06 இன் உப பிரிவு 2.1, 2.2 மற்றும் 2.3 ஆம் பந்தி)**

2026 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு காசுப் புத்தகங்கள் மீதியைக் குறிப்பிட்டு TOD/IMP/06 ஆம் இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து உப அலுவலகங்கள் அற்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 2027 ஜனவரி 01 ஆம் திகதியும் ,உப அலுவலகங்கள் உள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மாவட்டச் செயலகங்களின் ஊடாக 2027 ஜனவரி 05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கைப் பேணி வருகின்ற வங்கிக் கிளைக்கு ஒப்படைத்து உரிய தொகையைப் பொதுத் திறைசேரிக்கு கிடைக்கும் வகையில் செலுத்தல் வேண்டும். வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறும் "வரவு" அறிவித்தலை உடனடியாக அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் TOD/IMP/06 இலக்கத்தைக் கொண்ட மாதிரிப் படிவத்தின் பிரதியையும் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2026 ஆம் ஆண்டில் உப அலுவலகத்திற்கு மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல இடைக்கால பணி முற்பணங்களையும் 2026.12.31 ஆம் திகதியன்று அல்லது அன்றைய தினத்துக்கு முன்னர் தீர்த்து அந்தக் காசு மீதிகளை 2027 ஜனவரி 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் திறைசேரிக்கு அனுப்பக்கூடிய விதத்தில் தேவையான முன்னேற்பாடுகளை செய்து கொள்ளுதல் வேண்டும்.

3. **2026 ஆம் ஆண்டுக்கான மீள்நிரப்பல் செய்யப்பட்ட வெளிநாட்டுதவி பணி முற்பணக் கணக்கை (7003)செலுத்துவதற்காக வருட இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல். வழிகாட்டி இல.06 இல் 3 ஆவது பந்தி உப பந்தி 3.1)**

மீள்நிரப்பல் செய்யப்பட்ட வெளிநாட்டு உதவிக்காக 7003 குறியீட்டிலக்கத்திற்கு கீழ் கருத்திட்டத்தினால்பெற்றுக்கொள்ளப்பட்ட பணி முற்பணங்களை 2026 டிசம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்தின் மீதியை உறுதிப்படுத்தி மாதிரிப் படிவ இல. TOD/IMP/07 ஐ உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2027 ஜனவரி 05 ஆம் திகதியன்று கணக்கைப் பேணி வருகின்ற வங்கிக் கிளைக்கு ஒப்படைத்து அந்தத் தொகையை பொதுத் திறைசேரிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலுடன் வங்கியிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற "வரவு" அறிவித்தலை சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் மாதிரிப் படிவ இல. TOD/IMP/07 மற்றும் TOD/IMP/07(i) ஆகியவற்றை சரியாகப் பூர்த்தி செய்து தொடர்புடைய அமைச்சின் செயலாளருக்கு பிரதியொன்றைக் கொண்டதாக உடனடியாக இந்த அமைச்சுக்கு அனுப்ப வேண்டும்.

4. கொடுக்கப்பட்ட காலக்கெடு, கணக்குகளைத் தீர்ப்பதில் நடைமுறைக்கு சாத்தியமானதாகக் கருதப்படும் சூழ்நிலையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2026.12.31 அன்று காசுப் புத்தக நிலுவையை வைப்பிலிட முடியுமான அமைச்சு/ மாகாண சபை / திணைக்களம் / மாவட்டச் செயலகம் ஆகியவை 2027.01.05 வரை காத்திருக்காமல் நிலுவைகளை அன்றைய தினமே வைப்பிலிட முயற்சி செய்யவேண்டும். அதற்கிணங்க முற்பணக்கணக்கை தீர்ப்பதற்கான குறிப்பு, மாதாந்த கணக்குச் சுருக்கத்தின் ஊடாக பொதுத் திறைசேரிக்கு முன் வைக்கப்படுகின்ற அதேவேளை, 2026.12.31 திகதியின்று திறைசேரி புத்தகத்திற்கிணங்க தீரக்கப்படாத பணிமுற்பணக் கணக்கு நிலுவையை குறைப்பதற்கு வழிவகுக்கும்.

5. திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இல.06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்ந்தும் அவ்வாறே மாற்றமின்றி காணப்படும்.

6. இந்த வழிகாட்டுதல் தொடர்பான மேலதிக விளக்கங்களை திறைசேரிசெயற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு. எம்.ஏ.எஸ். பெரேராவை (தொலைபேசி இலக்கம்: 0112484901) தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ.எம்.எஸ்.மல்காந்தி

பணிப்பாளர் நாயகம்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்